கல்லூரிகளைக் கொடுத்து, விவசாயிகளுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதலைக் கொண்டுவரக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில், தூத்துக்குடி மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, முத்தலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட அந்த இடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்கள் பல்வேறு விளக்கங்களைச் சொல்லி, தங்களுடைய பகுதியிலே கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபோல, தூத்துக்குடி மாவட்டத்திற்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்ற வகையிலே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு, வரவிருக்கின்ற காலங்களில், அதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

C.T. ஸ்கேன் வசதி

***307—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 1]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்ட மருத்துவமனையில் C.T. *ஸ்கேன் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் மொத்தம் 113 C.T. Scanners *87 மையங்களில் பயன்பாட்டில் உள்ளன. கோவிட்–19–ன் அவசரகாலத் தேவையின் அடிப்படையில், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கென வாங்கப்பட்ட 16 கூறு* CT Scanner, *கோயம்புத்தூர்* E.S.I. *மருத்துவமனை சிறப்பு மருத்துவமனையாகச் செயல்பட வேண்டியிருந்ததால், நோயாளிகளின் ஆய்வுக்கெனத் தற்காலிகமாக, அம்மருத்துவமனையில் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் செயல்படத் தொடங்கியது. மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை 146 படுக்கை வசதிகள் உள்ள வட்ட மருத்துவமனையாக இருப்பதாலும், சராசரியாக 453 புற நோயாளிகள், 94 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாலும், மாதம் ஒன்றிற்கு சராசரியாக 32,030 ஆய்வகப் பரிசோதனைகள், 173* E.C.G., *413* X–Ray *மற்றும் 159* USG Scan *ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதன் பயன்பாட்டைக் கருத்தில்கொண்டு, ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய* CT Scanner *ஒன்று வாங்கி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில், மருங்கூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சில கட்டட வசதிகள் தேவைப்படுகின்றன. ஆண், பெண்* O.P. *பிரிவிற்கு ஒரு கட்டடமும், கூட்ட அரங்கிற்கு ஒரு கட்டடமும், அலுவலகக் கட்டடமும் தேவைப்படுகின்றன.*

மேலும் நோயாளிகளை இம்மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்குத் தனியாக ஒரு Ambulance இல்லை. மருத்துவர்கள் பயன்படுத்துவதற்கு Jeep வசதி தேவைப்படுகிறது. காடாம்புலியூர், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள், நீங்கள் debate–ல் பேசுவது போன்று கோரிக்கைகள் வைக்கிறீர்கள். ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையனைத்தும் ஒரே மருத்துவமனைக்குத் தேவையானவைதான். காடாம்புலியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இவையனைத்தும் தேவைப்படுகின்றன. Ultra Sound Scan Machine தேவைப்படுகிறது. இவை, என்னுடைய நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் சார்பில், பல நாட்களாக இருந்து வருகின்ற கோரிக்கைகள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே கடிதம் வாயிலாக தன்னுடைய கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அங்கு கூடுதல் கட்டட வசதிகள், ஒரு 108 Ambulance வசதி, Ultra Sound Scan Machine போன்ற பல்வேறு கோரிக்கைகளை ஏற்கெனவே அவர் அக்கடிதத்தில் சொல்லியிருக்கிறார். நிச்சயம் இந்த நிதியாண்டில், அவை அனைத்தும் அம்மருத்துவமனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை மாவட்ட அரசு தலைமை

2021 செப்டம்பர் 1]

மருத்துவமனையில், MRI Scan வசதி இல்லை. அங்கே மருத்துவ வசதிகளும் பற்றாக்குறையாக இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அவற்றைச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் உள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்கு அவர் கோரிய அந்தக் கூடுதல் வசதிகள் தவிர, மேலும் 50 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதலான பல்வேறு மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக சிறந்த வகையில் அம்மருத்துவமனை மேம்படுத்தித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், மேட்டூர் தலைமை மருத்துவமனை உள்ளது. அத்தலைமை மருத்துவமனையில், பல் மருத்துவர், கண் மருத்துவர், குழந்தைகள் மருத்துவர் இல்லாத நிலை உள்ளது. CT Scan மற்றும் MRI Scan வசதிகள் இல்லாத நிலையும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள அந்தக் கூடுதல் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் பணியாற்ற வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைக் காய சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்க வேண்டும். NH 70–ல் ஒரு பகுதியாக இருப்பதனால், அங்கு அதிக அளவில் விபத்துகள் நடைபெறுவதால், அந்த மருத்துவமனையில் தலைக் காய சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்க வேண்டும். மேலும், இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 60 ஆண்டுக் காலம் பழமையானதொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகும். இம்மருத்துவக் கல்லூரியில் நீண்ட காலமாக 100 மாணவர்களுக்கான மருத்துவக் கல்லூரி இடங்கள்தான் இருக்கின்றன. அதனை 200 இடங்களாக அதிகரித்துத் தரவேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டிலுள்ள அரசு மாவட்ட மருத்துவமனைக்கு National Health Mission–NHM நிதியிலிருந்து, ஏற்கெனவே, தலைக்காய சிகிச்சைப் பிரிவிற்கான அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் அது தொடங்கப்படும் என்கின்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சார்ந்த கோரிக்கைகளுக்குக்

கேள்வி கேட்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரை சாலை, ஸ்டார் திரையரங்கம் அருகே செயல்பட்டு வந்த தாய்–சேய் நல மருத்துவமனை, பாபு ரோடு சாலைக்கு இடம் மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. தொலைவில் இருப்பதால், கர்ப்பிணிப் பெண்கள் சிகிச்சைபெற மிகுந்த சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். எனவே, மீண்டும் இந்த தாய்–சேய் நல மருத்துவமனை, ஸ்டார் திரையரங்கம் அருகே மாற்றம் செய்யப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன். இதுகுறித்து, 10–7–2021 அன்று நான் கடிதம் வாயிலாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றேன். அதுபோலவே, அரசு பொது மருத்துவமனையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், ஒரு கேள்வி கேளுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: Lift சரிவர செயல்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியுடன் முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: அங்கு புதிதாக 2 lifts அமைத்துத் தர வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அங்கு வருகை தந்திருந்தபோதுகூட, lift இயங்காமல் இருந்தது. எனவே, அங்கு புதிய lift அமைத்துத் தரப்படுமா என்ற கேள்வியையும், cancer சிகிச்சைப் பிரிவிற்குத் தனி department அமைக்கப்படுமா என்பது குறித்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்

அவர்கள், திருச்சிராப்பள்ளி மருத்துவமனையில் இருக்கின்ற மின்தூக்கி சரியாக இயங்கவில்லை என்று சொன்னார்கள். நானும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும் அண்மையில் அங்கு ஆய்விற்குச் சென்றபோது அந்த lift–ல்தான் சென்றோம். நன்றாகத்தான் இயங்கியது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள் செல்லும்போது, ஏதோ stuck ஆகியிருக்கிறது. *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Weight தாங்காமல் இருந்திருக்கும்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு உறுப்பினருடைய உடல் பருமன் காரணமாக இருக்கலாம். இன்னொன்றும் சொல்லியிருக்கிறார். தாய்–சேய் நல மருத்துவமனை தூரத்தில் இருக்கிறது; ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த இடத்திற்கே மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அடுத்த முறை, நாங்கள் திருச்சிராப்பள்ளிக்குச் செல்கிறபோது, அந்த மருத்துவமனையை ஆய்வு செய்து, தேவைப்படுமானால், அவர் சொல்வதைப்போல மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், எல்லோருக்கும் பதில் சொல்வதனால், நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறீர்கள். காலத்தின் அருமை கருதி, வினாக்கள்–விடைகள் நேரம் இத்துடன் முடிவு பெறுகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி நகராட்சி, தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கள்ளக்குறிச்சி நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு